## விளையாட்டுத்துறை சார்ந்த வசதிகள் கிராமங்கள் வரை சென்றடைய வேண்டும் என்ற வகையில்

# திராவிட மாடல் அரசு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது!

**திண்டுக்கல் – தேனி மாவட்டங்களைச் சேர்ந்த 436 ஊராட்சிகளுக்கு 720 எண்ணிக்கையிலான ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!**

**சென்னை,பிப்.2–**

**சென்னையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திண்டுக்கல் – தேனி மாவட்டங்களில் உள்ள 436 கிராம ஊராட்சிகளுக்கு – 720 எண்ணிக்கையிலான `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் நிகழ்ச்சியை, நேற்று முன்தினம் காணொலிக் காட்சி வாயிலாக, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், `திராவிட மாடல் அரசு’, விளையாட்டுத்துறை சார்ந்த வசதிகள் கிராமங்கள் வரை சென்றடைய வேண்டும் என்று, ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்’, ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களை உருவாக்கட்டும்’ என்று விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 435 கிராம பஞ்சாயத்துக்களுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’டை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம். ` முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கும், `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’டை வழங்குவோம்’ என்று சட்டப்பேரவையில் அறிவித்து இருந்தோம்.

### கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்!

அதன்படி, மதுரையில் சென்ற வருடம் பிப்ரவரி மாதம் முதன்முதலாக 420 ஊராட்சிகளுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தோம். அதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்று கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைக் கொடுத்தோம்.

இன்றைக்கு இறுதியாக திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள 436 கிராம ஊராட்சிகளுக்கு சுமார் 720 `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’டை வழங்கி இருக்கிறோம். தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களுக்கு நாங்கள் அனைவரும் நேரில் சென்று ஸ்போர்ட்ஸ் கிட்டைக் கொடுத்தோம். அதே போல உங்கள் மாவட்டங்களுக்கும் நாங்கள் வர வேண்டும் என்று ஆசைத்தான். ஆனால், தவிர்க்க முடியாத பணிச் சூழலால் எங்களால் நேரில் வந்து இந்த விளையாட்டு உபகரணங்களைக் கொடுக்க முடியவில்லை. ஆனாலும், உங்களை எல்லாம் இந்த காணொலிக் காட்சி வாயிலாகப் பார்த்து பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### திராவிட மாடல் அரசு!

நம் திராவிட மாடல் அரசு, சொல்வதைச் செய்கின்ற அரசு. ஒரே வருடத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற 12 ஆயிரத்து 525 பஞ்சாயத்துக்களுக்கும் 16 ஆயிரத்து 800 எண்ணிக்கையிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை கொடுத்து இருக்கிறோம் என்பதே அதற்கு உதாரணம். கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும், மேடையும் எங்களுக்கு மிகவும் நெகிழ்ச்சியான, நெருக்கமான நிகழ்ச்சியாக அமைந்தது. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற ஒவ்வொரு மேடைக்கும் ஒரு சிறப்பு இருந்தது.

இன்றைக்குக் கூட, இந்த மேடையில் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சர்வதேச வாள் வீச்சு வீராங்கனை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதி மாணவர் தங்கை தமிழ்ச்செல்வி இருக்கிறார். தேசிய விளையாட்டுப் போட்டிகள், சீனியர் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்று, ஜூனியர் மற்றும் ஏசியா சாம்பியன்ஷிப் பட்டத்தையும் அவர் பெற்றுள்ளார்.

### மூத்த ஆய்வாளர் பணி!

அவரின் சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக, 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவருக்குக் கூட்டுறவுத் துறையில் மூத்த ஆய்வாளர் பணியை நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். தங்கை தமிழ்ச்செல்வி விளையாட்டுத் துறையில் சாதிக்கத் துடிக்கும் பலருக்கும் முன்மாதிரியாகவும், ஊக்கம் அளிக்கின்ற வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த கூடைப் பந்து வீரர் சுஜித் அவர்களும் இங்கு வருகை தந்துள்ளார். சுஜித், எஸ்.ஜி.எஃப்.ஐ நேஷனல் கேம்ஸ், யூத் நேஷனல் கேம்ஸ் போன்றவற்றில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனைப் படைத்துள்ளார். அவர் நம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவர் என்பதில், நமக்கெல்லாம் ஒரு கூடுதல் பெருமை.

சுஜித் அவர்களும், தமிழ்ச்செல்வி அவர்களும் விளையாட்டுத்துறையில் இன்னும் பல சாதனைகளை, பல உயரங்களைத் தொட வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்களைப்போல, இன்னும் 100 வீரர்களை உருவாக்க வேண்டும் என்று நம் திராவிட மாடல் அரசு திட்டமிட்டு உறுதியோடு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

### சாம்பியன்ஸ் அறக்கட்டளை!

விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைக்கின்ற வீரர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன என்று ஒரு செய்தி கூட வரக்கூடாது என்கிற வகையில், நாம் செயல்பட வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் எங்களின் துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்களுக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்றுதான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் திட்டத்தைப் போன்று பலத் திட்டங்களை, நம் அரசு செயல்படுத்தி வருகிறது. தேசிய அளவிலான போட்டிகளில் 614 வீரர்களுக்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் மூலமாக சுமார் 12 கோடி ரூபாய் அளவில் நிதி உதவி வழங்கி இருக்கிறோம். அவர்களில் 113 பேர் பதக்கங்களை வென்று, நம் அரசுக்கு, நம் மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து நிதி உதவி தேவைப்படுவோர் https://tnchampions.sdat.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### பணி நியமன ஆணைகள்!

சமீபத்தில், விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் நம் விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ், பணி வாய்ப்பினை வழங்கும் விதமாக, நம் முதலமைச்சர் அவர்கள் இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரே நேரத்தில் 87 வீரர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த முன்னெடுப்புகளில் முக்கியமான ஒன்றுதான் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்குகின்ற திட்டம். விளையாட்டு என்பது நகரங்களில் மட்டுமல்ல குக்கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கும் போய்ச்சேர வேண்டும் என்றுதான் நம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த எங்களுக்கு உத்தரவிட்டார்.

### கலைஞர் பெயர் ஏன்?

கலைஞர் பெயரில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும், நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாக, கலைஞர் பேரில், முதன்முறையாக தொடங்கப்பட்ட திட்டம்தான் இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம்.

ஏன், இந்தத் திட்டத்திற்கு கலைஞர் பெயரை வைத்தீர்கள் என்று பலபேர் கேட்கிறார்கள். அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. கலைஞர் அவர்களிடம் இருந்த அந்த உழைப்பு, பயிற்சி, விடாமுயற்சி, போராடும் குணம், குழுச் செயல்பாடு இவை அனைத்தும் விளையாட்டில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் தேவை. அதை உணர்ந்துதான் நம் கலைஞர் அவர்களின் பெயரை, இந்தத் திட்டத்திற்கு வைத்தோம்.

### வாழ்த்துகளும் பாராட்டும்!

இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, நீங்கள் வெற்றிகரமான வீரர்களாக, வீராங்கனைகளாக வலம் வர வேண்டும். இன்றைக்கு நாங்கள் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்குகிறோம் என்றால், நாளைக்கு நீங்கள் பதக்கம் வெல்ல வேண்டும். அதற்கு நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு துணை நிற்பார்.

நன்றாக விளையாடுங்கள், உங்களைப் பாதுகாக்க நம் அரசு இருக்கிறது. விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுள்ள திண்டுக்கல், தேனி மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி மன்றங்களுக்கும், அதன் முகங்களாக வருகை தந்துள்ள இளைஞர்கள், மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அத்தனைப் பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ.பி. செந்தில்குமார், காந்திராஜன், சரவணகுமார், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராசப்பா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆர். வி.ஷஜீவனா ஐ.ஏ.எஸ்., பூங்கொடி, சர்வ தேச வாள் வீச்சு வீராங்கனை தமிழ்ச் செல்வி, தேசிய கூடைப்பந்து வீரர் சுஜித், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் விளையாட்டு வீரர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.1,2025) திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கும் விழாவில் காணொலி காட்சி வாயிலாக சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி (காணொலி வாயிலாக), சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில்குமார் (காணொலி வாயிலாக), ச.காந்திராஜன், கே.எஸ்.சரவணக்குமார், ஆ.மகாராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மொ.நா.பூங்கொடி. திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ், தேனி அல்லிநகரம் நகராட்சித் தலைவர் திருமதி ரேணுபிரியா பாலமுருகன் உள்பட அரசு உயர் அலுவலர்கள். விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



சென்னை – தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (31.01.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், கடந்த நவம்பர் மாதம் பக்ரைன் நாட்டில் நடைபெற்ற முதலாவது உலக பாரா டேக்வொண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வீரர்–வீராங்கனைகளுக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பாராட்டினார்.




தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சி செயலர்களின் ஆய்வு கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் ஊராட்சிகளில் செய்ய வேண்டிய அத்தியாவசிய பணிகள் அனைத்தும் தொய்வில்லாமல் நடக்க வேண்டும் என்றும் வளர்ச்சி பணிகள் எந்தவித தாமதமில்லாமலும் நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.